984 மார்ச் 26] [திரு. சி. பொன்னையன்]

திருச்சி மத்திய சிறையில் 16 சிறைவாசிகள் 18-10-83 முதல் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த 50 கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர். மேலும் சில சிறைவாசிகளும் சேர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர். ஆனால் 31-10-83 அன்று எல்லோரும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். பின்னர் 28-1-84 முதல் 8 சிறைவாசிகள் சிறைக் கண்காணிப்பாளரின் மீது சில குற்றச்சாட்டுகளைக் கூறி அவைகளை விசாரிக்க ஒரு உயர் மட்டக் குழு அமைக்கக் கோரி உண்ணாவிரதம் தொடங்கினர் அவர்களுடன் மேலும் 9 சிறைவாசிகள் சேர்ந்து கொண்டனர். இச்சிறைவாசிகள் அனைவரும் 2-2-84 அன்று உண்ணாவிரதத்தை கைவிட்டனர்.

உண்ணாவிரதம் இருந்த சிறைவாசிகள் நல்ல முறையில் கவனித்துக் கொள்ளப்பட்டார்கள். எச்சிறைவாசியும் அபாய நிலைமையை அடையவில்லை. சிறைக் கண்காணிப்பாளர் சிறைவாசிகளைப் பழி தீர்த்துக் கொள்கிறார் என்ற குற்றச்சாட்டும் பல சிறைவாசிகளின் நிலைமை மோசமாக உள்ளது என்ற புகாரும் உண்மைக்குப் புறம்பானதாகும். திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் தற்சமயம் எவரும் உண்ணாவிரதமோ, மோசமான நிலைமையிலோ இல்லை. மேலே கூறிய உண்ணாவிரதத்துக்குப் பிறகு திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் எவரும் உண்ணாவிரதம் இருக்கவில்லை. அங்கு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருக்கிறது என்ற காரணத்தாலும் சிறைவாசிகளின் பிரச்சினையைப் பொறுத்த வரைக்கும் தொடர்ந்து பரிவோடு அவர்கள் பிரச்சினையை தீர்க்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற உத்தரவாதம் அரசு சார்பில் கூறுகிற காரணத்தாலும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை கைவிடலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் வேண்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சரின் விளக்கத்திற்குபின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. கவன ஈர்ப்புகள்.

(அ) செங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், இரா. கருப்பையா, மற்றும் ரா. உமாநாத் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 1983-84-ம் ஆண்டிற்கு பிற்பட்ட நலத்துறையால் வழங்கப்பட்ட உதவித் தொகையை பட்டுவாடா செய்கையில், சிறிய தொகை பிடித்தம் செய்து கொண்டு அளிக்கப்பட்டதாக விசாரணை அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. அவ்வாறு மூன்று மாணவர்களிடத்திலும் பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 55 ஆகும். இரு மாணவர்களிடத்தில் ரூ. 20 வீதமும் மற்றொரு மாணவரிடத்தில் ரூ. 15-ம் பிடித்தம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

2. அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் 12-12-1983-லிருந்து 16—12-1983 வரை தற்செயல் விடுப்பில் சென்ற போது, உதவித் தலைமை ஆசிரியரும் விடுப்பில் இருந்ததால் மூத்த பட்டதாரி ஆசிரியரிடம், இப்பணி ஒப்படைக்கப்பட்டதென்றும் தலைமை ஆசிரியர் விடுப்பிலிருந்து திரும்பி வந்தபோது மீதி பணம் அவரிடம் கொடுக்கப்பட்டு 4-1-1984-ல் கருவூலத்தில் செலுத்தப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவருகிறது. உதவிப் பணம் குறைவாகப் பெற்றதாக எந்த புகாரும் மாணவரோ, பெற்றோரோ தன்னிடம் புகார் செய்யவில்லை என்று அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

3. மாணவர்கள் வேலை நிறுத்தம் 20-2-1984-ல் செய்துள்ளனர். அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒரு நபர் பள்ளிக்கு அருகாமையில் சாராயக்கடை திறப்பதற்கு ஆட்சேபித்ததால் அவரது தூண்டுதல் பேரில் தனக்கு எதிராக நடவடிக்கைகள் நடைபெறுவதாக தலைமை ஆசிரியர் தெரிவித்துள்ளார். மேலும் பள்ளியின் சில ஆசிரியர்கள் மாணவர்களைத் தூண்டி குழப்பங்களை ஏற்படுத்துகிறார்கள் என்றும் தலைமை ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

4. மாணவர் படிப்பு உதவித்தொகை பணத்தைப் பிரித்துக் கொடுத்த ஆசிரியர் திரு. இராமநாதன், தான் சரியாகவே பணம் கொடுத்ததாகவும் கொடுத்த பணத்திற்கு ரசீதுகள்

1984 மார்ச் 26]

பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆயினும் மாணவர்களிடம் 20, 20, 15 என்று பணம் பிடித்ததற்கான காரணங்களை நன்கு விசாரித்து அதற்குப் பொறுப்பானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

5. தற்போது பள்ளி நல்ல முறையில் சுமூகமாக நடைபெற்று வருகிறது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில், மாணவர்கள் எதற்காக வேலை நிறுத்தம் செய்தார்கள் என்பதற்கான காரணம் சரியாகச் சொல்லப்படவில்லை. மாணவர்களின் உபகாரச் சம்பளத்திலிருந்து தலைமையாசிரியரும் மற்றும் இரண்டு ஆசிரியர்களும் கையாடல் செய்துவிட்ட காரணத்தால் அந்த மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்தார்கள். பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தில் கலந்து, பெற்றோர்களும் ஆசிரியர்களும் முடிவு செய்து தலைமை ஆசிரியரையும், அந்த ஆசிரியர்களையும் விடுப்பிலே செல்லும்படி சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு ஸ்ட்ரைக் நின்று விட்டது. ஆனால், விடுப்பிலே சென்றவர்கள் மறுபடியும் வந்த காரணத்தினால் அந்த ஸ்ட்ரைக்கை ஆரம்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல், உபகாரச் சம்பளம் கைப்பற்றப்பட்டது பற்றிய காரணமும் சரியாகச் சொல்லப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் நீடித்துக்கொண்டே போகுமேயானால், இதுபோன்ற நிலைமைகள் மற்ற பள்ளிக்கூடங்களிலேயும் நடப்பதற்கு ஏதுவாகும். எனவே, இதைப்பற்றி துரித நடவடிக்கை எடுத்து, விரைவில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் கடுமையான தண்டனை அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாணவர்களிடத்தில், 20, 20 15 என்று ஆக மூன்று மாணவர்களிடத்திலும் பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 55 ஆகும். பிடித்ததற்கான காரணங்களை நன்றாக விசாரித்து, அதற்குப் பொறுப்பானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20, 20, 15 என்று 55 ரூபாய் மாணவர்களுடைய உதவித் தொகையிலேயே கையை வைத்திருக்கிறார்கள் ஆசிரியர்கள் என்ற பெயரால். ஆகவே இது ஒரு கடுமையான குற்றம். இதற்காக அங்கேயுள்ள மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல், நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கூறி வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இவ்வளவு நாட்களுக்குப் பிறகும் கூட, அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தான் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இம்மாதிரியான முறையில் கடுமையான குற்றங்களைப் புரிந்து

இருக்கின்ற பொறுப்பான ஆசிரியர் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் திருப்தி ஏற்படும் வகையில் இந்தப் பிரச்னை தீர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய சென்டிமெண்டை உணர்ந்து விரைவில் தக்க நடவடிக்கையெடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

(ஆ) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு நூல் வழங்குவது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ப. வெங்கடசுப்பிரமணியம், மற்றும் செ. செம்மலை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத்தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

*திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, ''தாரமங்கலம் தொகுதி மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு பாவு நூல், ஊடை நூல் கிடைக்காததால், நெசவாளர்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கடந்த இரண்டு மாதங்களாக பாவு நூலுக்குத் தேவையான பருத்தி, பஞ்சாப் மாநிலத்திலிருந்து புழுத் தொல்லையால் சரிவர தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை. மேலும் தமிழகத்தில் வெள்ளம் ஏற்பட்டதால் பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டது. இருப்பினும் காஞ்சிபுரம் கோ-ஆப்-டெக்ஸ் நூல் கிடங்கு மூலம் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள சங்கங்களுக்கு கீழ்க்கண்டவாறு 60 மற்றும் 80-ம் நெம்பர் நூல் வழங்கப்பட்டுள்ளது.

60 எண் (பேல்களில்).

	தேவை.	மாதாந்திர விற்பனை. (பிப்ரவரி 1982).	இருப்பு.
பாவு	50	45	..
ஊடை	50	70	45